# நான் உங்களை நம்புகிறேன்.

மனிதகுலம் ஒரு குடும்பம்
மண்ணில் அமைதி வரும் என்றும்
நீங்கள் சொன்னீர்கள்
புதிய யுகம் பிறக்கும் என்றும்
புனித உலகு மலரும் என்றும்
நீங்கள் சொன்னீர்கள் – இதை
நீங்கள் சொன்னீர்கள் – இதை

கோரஸ்: நானும் நம்புவேன் அதை நானும் நம்புவேன்
நானும் நம்புவேன் அதை நானும் நம்புவேன்

இறைவனையே நம்பிக் கொண்டு
இகத்தில் அமைதிக்கென உழைக்கும்
இனத்தை சொன்னீர்கள் – புது
இனத்தை சொன்னீர்கள்

கோரஸ்: நானும் நம்புவேன் அதை நானும் நம்புவேன்
நானும் நம்புவேன் அதை நானும் நம்புவேன்

இறைவன் தந்த வாக்குறுதிகள் நிறைவேற்றம்
இகத்தில் ஒரு பொன்யுகத்தை உருவாக்கவும்
இறைஜோதி பூமிக்கு வந்தார் நான் நம்புவேன் – ஒரு
நூற்றாண்டு முன்பு வந்தார் நான் நம்புவேன்.
(மனித குலம்)